249

தாரண ஹூ
[illegible]ட்டாசி - ஐப்பசி மீ

ஸ்ரீ:

ஸம்புடம் - 3
ஸஞ்சிகை - 10

October ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம: 1944

~~2~~ 249

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

"அஹோபிலே காருடசைலமத்யே க்ருபாவசாத் கல்பித ஸந்நிதாநம் |
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம் லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ||"

		பக்கம்
விஷய ஸூசிகை :—	1. ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்	253
	2. 'அந்தப் பையன் கேட்ட கேள்வி'	255
	3. ஆத்ம குணம்	256
	4. ஸ்ரீ அத்திப்பட்டு அழகிய சிங்கர் ப்ரபாவம்	257
	5. செய்திகள்	258
	6. ஸம்பாதகரின் குறிப்புக்கள்	259

ஸ்ரீ:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

[4-ஆம் அங்கம்]

[ஸ்ரீ. உப. அன்பில் வி. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L.,
அட்வோகேட், திருச்சி]

[ஸம்புடம் 3, ஸஞ்சிகை 9, பக்கம் 247-ன் தொடர்ச்சி]

[லோபனும் த்ருஷ்ணையும் வருகிறார்கள். லோபன் வருவதைக் காண்கையில் வஸந்தன் அவனை வர்ணிக்கிறான்.]

[illegible]ர்ம கார்யங்களை த்வம்ஸம் செய்வதில் இவன் துரந்தரன்; த்யாந ஸமாதிக்கு [illegible]தற்கு இடையூறுகளைத் தொலைப்பவன்; மோக்ஷத்தில் ஆசையை [illegible]ன்றோ மஹாமோஹனால் இப்பொழுது த்ருஷ்ணை யென்னும் வார [illegible] ஸஹசரியுடன் அனுப்பப்பட்டு வருகிறான். தர்ம கார்யங்களுக்குப் [illegible]வனும். லோபன் அதற்கு இடமே கொடான். த்யாநத்திற்கு உட் [illegible] நினைவே தொடரும்; 'பணத்தை யல்லவோ சிந்தித்துப் பெருக்க [illegible] பெருக்கி யென்ன பயன்?' என்று தோன்றச் செய்வான். வித்தேஷ[illegible] [illegible]க்ஷத்திற்கு ஆசை கூடாது. லோபன்தான் வித்தேஷணை. பணப்

JL
Q22m211, N41
N44.3.10.
2/0131

பெருக்கில் ஆசை வித்த த்ருஷ்ணை. லோபனுடைய பத்நியான த்ருஷ்ணையை 'வாரவிலாஸிநீ' யென்று ஸ்வாமி குறிப்பதில் மிக்க ரஸ முளது. விடாத பத்நியாயினும் த்ருஷ்ணையினிடம் வேசிக்குள்ள சில குணங்கள் உண்டு. தர்ம கார்யங்களில் ஸஹசரிப்பவர் பதி பத்நிகள். இந்தத் தம்பதிகள் தர்ம த்வம்ஸிகள்; இவர்கள் தர்மத்திலேயே புகமாட்டார்கள்; பிறரையும் புகவிடார்கள், தபஸ்ஸையும் யோகத்தையும் அப்ஸரஸ்ஸுக்க ளென்னும் வேசிகள் விக்நம் செய்வர். த்ருஷ்ணையும் அதைச் செய்வாள். தினந்தினம் புதுப் புது உடையணிகள் அணிந்து, புதுப் புது மினுக்குகளும் செய்வர் வேசிகள்; வயது செல்லச் செல்ல யௌவநத்தையே கொண்டாடுவர். ஆசைப்பட்டது கிடைத்ததும் மேலே மேலே ஆசைப்படுவது த்ருஷ்ணையின் ஸ்வபாவம். தண்டு காலா யூன்றி யூன்றித் தட்டித் தள்ளாடி நடக்கையிலும், ஆசை யௌவநத்தையே கொண்டாடும். 'த்ருஷ்ணைகா தருணாயதே' என்பர். 'வ்ரஜோயாதி ஹ்ருஹீத்வா உஷ்ணம் தடவி நவேம்வ த்யாமாவிஷ்ணு' என்பது கீதகோவிந்தம். இந்த விசித்ரங்கள் பின்பும் வர்ணிக்கப்படுகின்றன. 'வாரம்' என்பது திநம்; திநம் புதுப் புது விலாஸம் செய்பவள் 'வார விலாஸிநீ' என்று திருவுள்ளம்.

லோபன்:—த்ருஷ்ணையின் பதியான நான் மஹாமோஹ தாஸன். தங்க மயமான அகண்ட ப்ரம்ஹாண்டங்களைப் படைத்து எனக்கு அளித்தாலும் என் ஆசை நிரம்பாது. காமன் க்ரோதன் லோபன் முதலியவரும், தங்கள் ராஜாவான மஹாமோஹனுக்கும் துர்மதி தேவிக்கும் தாஸ்யம் புரிவதையே விரும்புகிறார்கள். ஸ்வாதந்த்ர்யத்திற்கு ஆசைப்படுவதில்லை யென்று ஸ்வாமி தாஸ்யத்தின் ரஸத்தை வ்யஞ்சநம் செய்கிறார். [லோபன் தன் ஸஹசரியைத் தழுவிக்கொண்டு] 'இனியாளே! எல்லா அப்ஸரஸ் ஸ்த்ரீகளின் அழகுகளையும் ஒருமிக்கச் சேர்த்து, ப்ரஹ்மாவே தானே, என்றைக்கும் யௌவநம் நீங்காத நித்ய யுவதியான உன்னை அமைத்தார். இது வெறுந் துதிப் பேச்சென்று நினையாதே. இதை நிரூபிக்கிறேன் பார். உன்னுடைய வயிற்றிலும் இடையிலும் பொன்மலை வெள்ளிமலை முதலியவற்றைக் கொட்டினாலும், மேலும் மேலும் அவை சிறுக்கவே சிறுக்கின்றன. எத்தனை கொட்டினாலும் வயிறு இளைக்கிறது; இடை சிறுக்கிறது; வயது முதிர முதிரத் தொந்தி விழும்; உனக்கு இவை இல்லை. திலோத்தமை யென்னும் ஓர் அப்ஸரஸ்ஸை, உலகத்திலுள்ள எல்லா அழகுகளிலும் உள்ள ஸாரங்களை எள் ப்ரமாணமாகச் சேர்த்துத் திரட்டி ப்ரஹ்மா அமைத்தார். அவள் உட்பட எல்லா அப்ஸரஸுக்களினிடம் உள்ள அழகுகளையெல்லாம் சேர்த்து உன்னைத் தானே படைத்தார்போலும்.

த்ருஷ்ணை:—உன் ப்ரியையான என் இனிப்பு எல்லாவற்றுக்கும் மேம்பட்ட தென்பதில் என்ன விந்தை? தேவர்கள் அஸுரர்கள் இவர்கள் யாவருடைய இல்லங்களிலும் இருக்கும் எல்லா ரத்நங்களையும் கொணர்ந்து சேர்த்து, என் அழகிற்குத் தக்கபடி அணிகலன்கள் செய்யவேணும். தேவாஸுர க்ருஹங்களிலுள்ள எல்லா ரத்நங்களும் வேணும். 'க்ருஹம்' என்பது பத்நியையும் சொல்லும். அவர்கள் பெண்டிருக்கு அவர்கள் ஸம்பாதித்திருக்கு மெல்லா ரத்நங்களும் வேணு மென்றும் கருத்து.

லோபன்:—என்னால் ஜயிக்கப்படாதவர் யார்? எனக்கு வசமாகாதவர் யார்? மனிதர் என் வசமாகி மண்ணுக்கும் பொருளுக்குமாகப் பெரும் கோரப் போர்கள் புரிகிறார்கள். 'குபேரைச்வர்யம்' என்பர். அது எனக்குத் தாஸ்யமே யாகும். ஐச்வர்யமென்பது வெறும் பெயரே. உலகத்திலுள்ள தந மெல்லாம் பொக்கிஷத்தில் குவிந்துளது. அவனுக்குத் 'தநத்தை வழங்குகிறவன்' என்று பெயர். அப்பெயர் விபரீத நாமம். த்யாக குணத்தில் ராமனுக்கு உவமையாக அந்த லோபி கூறப்பட்டிருக்கிறான். அவனே எனக்கு அடிமையான பரம லோபி. பணக் குவியலைக் காத்துக்கொண்டே அருகில் இருந்தால், அதில் ஆசை பெருகி அதைச் செலவிடவே கூடாதென்று லோப முண்டாகிவிடும்; கேள்.

"लब्धन्न मुञ्चति विलक्षमतिर्न भुंक्ते धत्ते पुनः पुनरसौ महतीं धनायाम् ।
निद्रारसन्न लभते महतान्निधीनां रक्षापिशाच इव संप्रति राजराजः ॥"

லோபி, கையில் அகப்பட்ட த்ரவ்யத்தைக் கொஞ்சமேனும் விடமாட்டான். இவனுக்கு வீடு எப்படிக் கிடைக்கும்? 'வீடுமின் முற்றவும்' என்னும் உபதேசத்தை இவன் மதிப்பனோ? பிறருக்குக் கொடுக்க வேண்டாம்; தன் ஸுகத்திற்காகவாவது செலவிடுவனோ? மாட்டான். 'விலக்ஷமதி':—கிடைத்த பொருளைக் கொண்டு ஆச்சர்யப்பட்டுக் கொண்டே இருப்பன்.

'अर्थस्य पुरुषो दासो दासस्त्वर्थो न कस्यचित् । इति सत्यं महाराज !'

என்றார் பீஷ்மர் யுதிஷ்டிரரிடம். 'தன் பணத்திற்குத் தான் அடிமையேயல்லது, தனக்குத் தன் பணம் அடிமை யன்று; இவன் பணத்திற்கு இவன் ஸ்வம்; இவன் பணம் இவனுக்கு ஸ்வமன்று' என்பது பீஷ்மர் காட்டும் ரஸம். கிடைத்த பணக் குவியல்களைப் பார்த்து ஸந்தோஷத்துடன் இருப்பனோ? ஒருக்காலு மில்லை. மேலும் மேலும் பணப் பெருக்கில் ஆசைப்பட்டுக்கொண்டே அதே கவலையால் வருந்துவான். மேலே பணம் குவியக் குவிய அதற்கு மேல் ஆசையும் குவியும்.

"चिन्तामपरिमेयान्तां प्रलयान्तामुपाश्रिताः" "इदमस्तीदमपि मे भविष्यति पुनर्धनम्" என்று கீதை. மோக்ஷரூபமான ப்ரஹ்ம ரஸ மிராவிடினும், எல்லா ப்ரஜைகளுக்கும் நித்ரா காலத்தில் தினம் தினம் அநுபவிக்கப்படுவதாகச் சொல்லப்படும் ப்ரஹ்ம ஸம்யோக ரஸம் உண்டோ? அதுவு மில்லை. 'ப்ரஹ்ம ரஸம் லபித்து ப்ரஹ்ம வித்துக்கள் அந்த ரஸ லாபத்தால் ஆநந்திப்பர்' என்னும் ஶ்ருதியை இங்கு 'ரஸம் ந லபதே' என்பது ஸூசிப்பிக்கின்றது. இவனுக்கு நித்ரா ப்ரஹ்ம ரஸமு மில்லையென்று ரஸ வ்யஞ்ஜநம். இவனுக்கு நித்ரா ரஸமு மில்லை. மஹத்தான நிதிகளை இவன் இராக் காலத்தில் நித்ரையே இராமல் பூத ரக்ஷ: பிஶாசங்கள் போல் காக்கும் காவல்காரன். பிஶாசங்களுக்குத் தூக்க முண்டோ? இவன் தநத்தில் இவனுக்கு ஸ்வாம்ய மில்லை. 'மஹதாம் நிதீநாம்.' நித்ரா காலத்தில் ஜீவர்களைக் கட்டி அணைக்கும் ப்ரஹ்மத்தை 'ஹிரண்ய நிதி', 'ஸ்வர்ண நிதி' என்று நிதிக்கு ஶ்ருதி உவமையிட்டது. ப்ரஹ்ம மென்னும் நிரதிஶய ப்ருஹத்தான ஹிரண்ய நிதியிலும் மஹத்தான நிதிகள் இந்தத் தங்கக் குவியல்கள் என்று எண்ணி அந்த ப்ரஹ்ம நிதியைத் தள்ளி, அதனிலும் பெரிய நிதிகளாகத் தன் நிதிகளைக் கருதித் தூங்காமல் காக்கிறான். பெயர் ராஜராஜன். உண்மையில் பணத்தைக் காக்கும் பணப் பிசாசு. எனக்குத் தாஸன்.

த்ருஷ்ணை :—பொரு ளென்னும் புருஷார்த்தத்திற்கு மூவுலகும் அடிமைப்பட்டதே. 'புருஷார்த்தம்' என்பதற்கே 'புருஷன் ஆசைப்படுவது' என்பது பொருள். அந்த வார்த்தையிலேயே 'அர்த்தம்' என்பது இருக்கின்றது. யார் தான் அர்த்த மென்னும் புருஷார்த்தத்தை விட முடியும்?

[தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

"அந்தப் பையன் கேட்ட கேள்வி"

[ஸ்ரீ. உப. பண்டிட் N. சேஷாத்ரி தாதாசார்யர் சிரோமணி, தஞ்சை.]

[ஸம்புடம் 3, ஸஞ்சிகை 9, பக்கம் 248-ன் தொடர்ச்சி.]

8-NOV 1944
MADRAS

அங்கு நமன் வீட்டி லில்லாததால், பையன் மூன்று நாட்கள் உணவின்றி அவன் வீட்டிலேயே தங்கிவிட்டான். நான்காம் நாள் காலையில் நமனும் தன் வீடு வந்து சேர்ந்தான். தன் மந்த்ரிகளிடமிருந்து, ஒரு பையன் வேள்வியில் தக்ஷிணையாகக் கொடுக்கப்பட்டு மூன்று தினங்களாகப் பட்டினியாய் இருப்பதாக அறிந்தான். உடனே நமன் பரபரப்புடன் அப்பையனைக் கண்டு உபசரித்து, மூன்று தினங்கள் உணவின்றித் தன் வீட்டில் தங்கிய பாபத்திற்கு ஈடாக மூன்று வரங்களைக் கொடுப்பதாகக் கூறினான்.

முதலில் பையன், "மறுபடியும் நான் பூ வுலகிற்குச் சென்றால், என் தகப்பனார் என்னைக் கண்டு கோபிக்காமல் இருத்தல் வேண்டு மெனக் கேட்டான். நமனும் "அப்படியே" என வரம் கொடுத்தான். பிறகு இரண்டாவது வரத்தால், "இவ்வுலகைக் காட்டிலும், பசி தாகம் துக்கம் தூக்கம் மூப்பு முதலான துன்பங்களற்ற ஸுவர்க்கம் என்பது ஒன்றிருக்கிறது என்றும், அதை அடையவேண்டு மாயின் இவ்வுலகில் நெருப்பில் செய்ய வேண்டிய கடனை (யாக ஹோமதிகளைச்) செய்யவேண்டும் எனக் கூறுகிறார்களே, அதன் உண்மையைச் சற்று விளக்கவேண்டும்" எனக் கேட்டான். உடனே நமனும் இந்தப் பையனின் தன்மையைக் கண்டு சற்றுத் தயங்கி, அதன் உண்மைகளை மிகவும் தெளிவாக விளக்கினான். உலகில் மனிதர்கள் விரும்பும் எவ்வளவோ இன்பங்க ளிருக்க, அவைகளை விரும்பாமல் இச்சிறுவன் இவ்வுண்மையை விரும்பியதே அவன் சற்றுத் திகைத்ததின் காரணம்.

கடைசியில் மூன்றாவது வரத்தால், "ஓ, தர்ம தேவதையே! ஓ, முழுமுதற் கடவுளே! உடலைக் காட்டிலும் ஆத்மா ஒன்று உண்டென்று சிலரும், ஆத்மா என்பதே கிடையாது என்று சிலரும், இவ்வாத்மாவிற்கு ஜீவாத்மா எனவும், எல்லாம் வல்ல இறைவனைப் பரமாத்மா எனவும், அதுவும் இதுவும் ஒன்றாயிருப்பினும் சற்று வேறுபட்டதெனவும், அவனவன் ஆத்மாவே கடவுள் அந்த அறிவு என்ற விளக்கால் காணலா மெனவும் கூறுகிறார்களே. அதைப்பற்றி எனக்குத் தேவரீர் உபதேசிக்க வேண்டும்" என மிகவும் பணிவாகக் கேட்டான்.

"நான் நினைத்தது உண்மையாய்ப் போயிற்றே. சிறிய பையனும் பெரிய யோகியைப் போலல்லவா கேள்வி கேட்கிறான். இச்சிறுவனுக்கு எவ்வாறு அப்பெரிய உண்மையைப் புகட்டுவது? அது உலகப்பற்று உள்ளவர்களுக்கு மனத்தில் பதியாதே. உலகப் பற்றுள்ளவனுக்கு இவ்வுண்மை முதலில் புரிவதுபோல் இருந்தாலும், அது அடுத்த க்ஷணமே மின்னல்போல் மறைந்துவிடுமே. நம்பிக்கையும் இவ்வுண்மையில் சட்டென ஏற்படாதே. நம்பிக்கை என்ற அடிப்படையில் அல்லவோ இந்த வேதாந்த வித்யையாகிற கட்டிடத்தைக்

கூட்டவேண்டும்'' எனப் பலவாறு சிந்தித்து, அவனைப் பரிசோதிக்க விருப்பங்கொண்டு பதிலுரைத்தான்.

"பிள்ளாய்! தேவர்களுக்கும் புலப்படாத உண்மையல்லவோ இது. சிறியவனான உனக்கு இது எவ்வாறு புலப்படும்? ஆதலால் மற்ற ஏதாவதொரு வரத்தைக் கேள்'' என்றான். "தேவர்களால்கூட யாதொரு காரணம்பற்றி எது அறியமுடியாமல் இருக்கிறதோ, அந்த அரிய பொருளைக் கூறினால்தான் தேவரீர்க்குப் பெருமை ஏற்படும். எனக்கு புலப்படாதெனத் தேவரீர் உரைக்கலாம். புரியாதவர்க் கல்லவோ தேவரீர் புகுத்த வேண்டும். நோயுள்ளவருக் கல்லவோ மருந்து. இவ்வுண்மையைக் கேட்க என்னைத் தவிர இதுகாறும் ஒருவரும் தேவரீரை அண்டினதாகத் தெரியவில்லை. தேவரீரைப்போல் உபதேசிக்கக் கூடியவரும் மற்றொருவர் இருப்பதாகத் தெரியவில்லை. ஆதலால் தேவரீரும் நானும் இத்தருணத்தைப் பயன்படுத்திக்கொள்வது சாலச் சிறந்தது'' என்று அவன் சட்டெனக் கூறினான்.

நமன் அச்சிறுவனின் கலங்கா நெஞ்சத்தைக் கண்டு மற்றும் ஒரு முறை பரீக்ஷை செய்ய விரும்பியவனாய், "உனக்கு நூறாண்டு ஆயுளும், பலவிதமான ஸம்பத்துக்களும், யாவர்க்கும் கிட்டாத அரம்பை ஊர்வசி கல்பக வ்ருக்ஷம் முதலிய ஸம்பத்துக்களை யுடைய இந்த்ரலோகத்தையும் தருகிறேன். இந்த வரத்தை மட்டும் கேட்காதே'' என்று கூறினான்.

நமன் மொழியைக் கேட்ட பையன் அச்சமின்றி, "நமனே! தேவரீர் கூறியவை யாவும் எவ்வளவு நாட்கள் இருக்கும்? அல்லது அப்பொருள்க ளிருந்தாலும், அவைகளை அறியும் புலன்கள்தாம் எதுகாறும் உணர்ச்சியுடன் இருக்கும்? ஆதலால் இச்சிற்றின்பங்களைக் காட்டி என்னை ஏமாற்றிவிடலா மென நினைத்தீர்போலும். இந்த அரம்பை ஊர்வசி முதலிய செல்வங்களைத் தேவரீரே வைத்துக்கொள்ளலாம். நான் கேட்ட கேள்விகட்கு விடை வேண்டும்'' என்றான். நமன் மனம் திடுக்கிட்டது.

மேலும் அச் சிறுவன், 'தேவரீரை நேரில் கண்ட எனக்கு இச்சுகங்கள் தானாகவே கிட்டும்' என உரைத்தான். உடனே நமன் அச்சிறுவனிடம் மிகவும் அன்புகொண்டு வேதாந்த வித்யையை மிகவும் தெளிவாகவும், மனத்தில் படியும்படியாகவும், உபமான உபமேயங்களைக் கொண்டு உபதேசித்தான். அதன் ஸாரமாக, "ஆத்மா மலையிலும்பெரியது; அணுவிலும் சிறியது. அது ஒவ்வொருவர் ஹ்ருதயத்திலும் இருக்கிறது. அதன் பெருமையை எல்லாம் வல்ல இறைவ னருளால் அறியலாம்'' எனக் கூறி, உடலைத் தேராகவும், ஆத்மாவைத் தேரில் வீற்றிருப்பவனாகவும்; அறிவைத் தேரோட்டியாகவும், புலன்களைக் குதிரைகளாகவும், மனதைக் கடிவாளமாகவும், உலக ஸுகங்களைத் தேரோடும் பாதையாகவும் உவமித்துத் தெளிவாக்கினான்.

ஸ்ரீ:

ஆத்ம குணம்

[ஸ்ரீ. உப. S. T. ஸ்ரீநிவாஸாசார்யர், M. A., வித்வான் L.T., திருவையாறு]

ஸ்ரீ வைஷ்ணவனுக்கு முக்யமான அணிகள் 'எல்லாம் அவன் செயலே' என்று இந்திரா நாதனை நம்பிக் கிடத்தலும், க்யாதி லாப பூஜைகளில் ஈடுபடாதிருத்தலு மாகும். இங்கு, திருக்கோட்டியூர் நம்பிகளைப் பற்றி ஓர் இனிய வ்ருத்தாந்தம் சிஷ்டர்கள் மூலம் கர்ண பரம்பரையாகக் கேட்ட வண்ணம் எடுத்துரைக்க முன் வந்துள்ளேன். நம்பிகளின் ஆஸ்சர்யமான பக்தியையும், அர்ச்சா ருசியையும், ஸர்வபூத ஸௌஹார்த்தத்தையும், முக்யமாகப் பரர்களின் ஶ்லாகையில் பயப்படும் ஸ்வபாவத்தையும் செவியுற்ற ஸ்ரீ வைஷ்ணவலோகம் மகிழ்ந்தது. தென்னாட்டுத் திவ்யதேசங்களுக்கு யாத்ரையாய்ச் செல்லும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் அவரைக் கண்டு வணங்காமற் போவதில்லை.

ஒரு ஸமயம் திருக்கோட்டியூரில் திவ்ய ஸரஸ்ஸின் கரையில், வைராக்யத்தாலும் அநுஷ்டாநத்தாலும் திருமேனி மெலிந்து தேஜோராசியாய் விளங்கும் நம்பிகளை ஓர் யாத்ரிகர் அணுகி, "ஸ்வாமிந்! இந்தத் திவ்யதேசத்தில் நம்பிகள் என்ற குணநிதி, ஸ்ரீ சொக்க நாராயணனுக்குத் தொண்டு செய்துகொண்டு ஜகத் ப்ரதீபமாய் விளங்குகிறாராமே. அவருடைய திருமாளிகை எது?'' என்று வினவினர். நம்பிகள் பெரியாழ்வாரது பெருஞ் செல்வனான ஸ்ரீ ஸௌம்ய நாராயணனைக்கூட முதலில் நினையாது, தன்னை நினைத்து விரைந்துவரும் யாத்ரிக லோகத்தைக் கண்டு மனம் புண்பட்டார்; தன் முழு மனதுடன் நடு நடுங்கினார். புன் சிரிப்புடன் அவர், "ஸ்வாமி! ஆழ்வார்களின் அருஞ் செல்வமான அமலனைக்கூட நினையாது அவரை நினைக்க லாகுமா? அடியேன் அஸூயையால் சொல்லவில்லை. தேவரீர் நினைக்கும் வண்ணம் அவர் இல்லை. அவர் அடியேனுடைய ஸுஹ்ருத்து தான். அவருடைய காமக்ரோதங்கள் இங்கு ஆபால வ்ருத்தம் விசதமானவை. தூரதேசஸ்தரான தேவரீருக்கு என்ன தெரியும்? அபசரிதத்தில்

Suppliment to this issue

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

தாரண ஸ்ரீ ஐப்பசி மீ

1வ	செவ்வாய்க்கிழமை	—	துலாசுக்ல ப்ரதமை திதி. ஸங்க்ரமண தர்ப்பணம்.
2வ	புதன்கிழமை	—	த்விதியை திதி
3வ	வியாழக்கிழமை	—	அதிதி
4வ	வெள்ளிக்கிழமை	—	த்ருதியை திதி
5வ	சனிக்கிழமை	—	சதுர்த்தி திதி
6வ	ஞாயிற்றுக்கிழமை	—	பஞ்சமி திதி : ஸ்ரீ மணவாள மாமுனிகள் திருநக்ஷத்ரம்
7வ	திங்கட்கிழமை	—	ஷஷ்டி-ஸப்தமி திதி த்வயம்
9வ	புதன்கிழமை	—	ஸ்ரீ பொய்கையாழ்வார் திருநக்ஷத்ரம்
10வ	வியாழக்கிழமை	—	ஸ்ரீ பூதத்தாழ்வார் திருநக்ஷத்ரம்
11வ	வெள்ளிக்கிழமை	—	ஸ்ரீ பேயாழ்வார் திருநக்ஷத்ரம்
12வ	சனிக்கிழமை	—	ஸ்ரீ வைஷ்ணவ ஏகாதசி
18வ	வெள்ளிக்கிழமை	—	துலாக்ருஷ்ண த்ருதியை திதி
19வ	சனிக்கிழமை	—	சதுர்த்தி- பஞ்சமி திதித்வயம்
20வ	ஞாயிற்றுக்கிழமை	—	ஷஷ்டி திதி
21வ	திங்கட்கிழமை	—	அதிதி
22வ	செவ்வாய்க்கிழமை	—	ஸப்தமி திதி
26வ	சனிக்கிழமை	—	ஸர்வ ஏகாதசி
30வ	புதன்கிழமை	—	துலா • வ்ருச்சிக அமாவாஸ்யை திதி : வ்ருச்சிக ஸங்க்ரமண தர்ப்பணம்

[P.T.O.]

ஸ்ரீ:

1944 - ஸெப்டம்பர் மாஸத்தில் சந்தா வரவு.

				ரூ.	அ.
103	ஸ்ரீ	G. கோபால ஸ்ரீநிவாஸாசாரியர், காருகுரிச்சி	...	3	0
108	,,	S. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், மயிலாப்பூர்	...	3	0
629	,,	S. க்ருஷ்ணஸ்வாமி ஶ்ரௌதிகள், சிங்கநல்லூர்	...	3	0
630	,,	N. விஶ்வநாதன், அண்ணாமலைநகர், சிதம்பரம்	...	3	0
632	,,	K. ராஜகோபாலையங்கார், நெல்விக்குப்பம்	...	3	0
140	,,	S. பெருமாள் ரெட்டியார், ஆலந்தூர்	...	3	0
152	,,	T. லக்ஷ்மி நாராயண அய்யங்கார், சேலம்	...	3	0
522	,,	K. ஸ்ரீனிவாஸன், பனப்பாக்கம்	...	3	0
631	,,	சேட்லூர் T. கோபாலாசாரியர், போஸ்ட்காடி பிரோ	...	3	0
633	,,	K. S. சேஷாத்ரி, ஆப்பிரிகா	...	3	0
636	,,	C. ஆளவந்தார் நாயுடு, விக்ரவாண்டி	...	3	0
294	,,	ஐ. ஸ்ரீநிவாஸாசார்யர், சைதாப்பேட்டை	...	3	0
274	,,	மா. சடகோபாசார்யர், ஒரகடம்	...	3	0
635	,,	The Secretary, Sri Kodandarama Bhaktha Jana Sabha, Chingleput.	...	3	0

1942—43

633	,,	K. S. சேஷாத்ரி, ஆப்பிரிகா	...	6	0
623	,,	சேட்லூர் N. R. ராஜகோபாலசாசாரியர்	...	6	0

அவருக்கு ஈடு இல்லை. அவர் மஹா முன் கோபி. இன்னும் என்ன சொல்லவேண்டும்? அடியேன் இப்படிச் சொன்னதாக ஒருவரிடமும் சொல்ல வேண்டாம்'' என்றார். யாத்ரிகர் சற்றுத் தெளிந்தவர்போல், "ஸ்வாமி! இப்படித் தேவரீர் ஜ்ஞாபித்தது நல்லதாயிற்று. அவரைக் காண என்மனம் துடித்தது. இப்படி உள்ளபடி எடுத்துக் காட்டியது நலம்'' என்றார்.

நம்பிகள், "ஸ்வாமி! திருவரங்கத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ராமாநுஜனும் அவரைச் சார்ந்து வாழும் மஹாநுபாவர்களுமே நிஜமான வைஷ்ணவர்கள். அவரை நினைத்துப் பொழுது போக்குபவர்களும் அங்ஙனமே'' என்றனர்.

அன்று ஸாயங்காலம் யாத்ரிகர், சொக்க நாராயணனது புறப்பாட்டு வேளையில் ஓர் வைஷ்ணவரை அணுகி, "ஸ்வாமி! நம்பிகள் நம்பிகள் என்று ப்ரமாதப்படுகிறதே! அவருடைய ஸ்வபாவம் மிகவும் ஹேயமாமே. காமக்ரோத........'' என்று சொல்வதற்குள், கேட்ட வைஷ்ணவர் காதைப் பொத்திக்கொண்டு, "ஸ்வாமி! இந்த நாராசத்தைத் தேவரீர் செவியில் புகுத்தியது யார்?'' என்று கேட்டார். எம்பெருமானின் புறப்பாட்டிற்காக விரைந்து வந்துகொண்டிருந்த நம்பிகளை யாத்ரிகர் சுட்டிக்காட்டி, "அதோ அவர் தான்'' என்றார். கேட்ட வைஷ்ணவர் மெய் சிலிர்த்தார். "யஃ வஹ்ராதியாஹ வஜிஜாவஸ விஜவொ'' என்றபடி நின்று, ஆத்ம நிந்தை செய்துகொண்ட அந்த திவ்ய குணம்புதியை யாத்ரிகருக்குக் காட்டி, "ஸ்வாமி! அந்த மஹாநுபாவனே நம்பிகள்' என்றார். இருவரும் எம்பெருமான் புறப்பாடாய் எழுந்தருளிக் கொண்டிருந்த பொழுதே நம்பிகளின் திருவடிகளில் விழுந்து நமஸ்கரித்தனர். பதை பதைத்த நம்பிகள், "இதென்ன மஹாபசாரம்! ஸர்வேஸ்வரன் எழுந்தருளுவதையும் பார்க்க வில்லையா?'' என்று கேட்டார். யாத்ரிகர் கண்ணுங் கண்ணீருமாக, "ஸ்வாமி! நாங்கள் எம்பெருமானை எவ்வளவு கண்டோம்! தேவரீர், வெள்ளை யுள்ளத்தனகிய என்னைக் காலையில் இப்படி ப்ரமிக்கச் செய்யலாமா? புத்தி கொண்டும் காணகில்லாத மந்த மதிகளைத் தேவரீர் போன்றவர்கள் பரிசோதிக்கலாமா? தேவரீர் போன்ற திவ்ய ரத்நங்களால்தான் திருக்கோட்டியூர் ஸத்தை பெற்றது'' என்று வாய் குழறச் சொன்னார். நம்பிகள் அவரை வாரி யணைத்து, ஸ்ரீ வைஷ்ணவரைக் கண்டால் நிலவு தென்றல்போல் அகமகிழும் தன் தன்மையை வெளிப்படுத்தினர்.

"நாதனை நரசிங்கனை நவின் றேத்துவார்கள் உழக்கிய
பாததூளி படுதலாலிவ் வுலகம் பாக்கியம் செய்ததே.''

ஸ்ரீ:

ஸ்ரீ அத்திப்பட்டு அழகியசிங்கர் ப்ரபாவம்

[ஸ்ரீமதி ராஜலக்ஷ்மி, பஸவங்குடி, பெங்களூர்]

[ஸம்புடம் 3 : ஸஞ்சிகை 9 ; பக்கம் 249-ன் தொடர்ச்சி]

அதைக் கண்டு ராமன் என்னும் மற்றொரு பையன் வழிமறித்து, "அடே! போவாதே. உனக்கு இன்னிக்குக் கேடுகாலம். 'ஆனைவரும் பின்னே மணியோசை வரும் முன்னே'ன்னு ஒரு பழமொழி சொல்லுவாங்களே. அது உனக்கு சரியாயிருக்கப் போவுது. அந்த சாமியார் நம்ம வழிக்கு வருரா? நம்ம மந்தையைக் கலைக்கிறரா? மாட்டை அதட்ருரா? அல்லது வெரட்ருரா? ஒண்ணுமில்லை. அவரிடம் என்ன மகிமை! மந்தை மாடுங்க ளெல்லாம் வழியை விட்டு விலகி அவரைப் பார்த்துண்டே சந்தோஷமாய் நிக்கிறது. சாமியார் அந்த பக்கம் போனதும் தன்னலே வந்து சேருது பார். அதிலே உனக்கு என்னடா நஷ்டம்?'' என்று பலவகையாய்ப் புத்தி புகட்டினன்.

துஷ்டச் சிறுவன் கேட்கவில்லை. அம்மஹானின் எதிரில் ஓடிச் சென்று வழியை மறித்தான். உடனே ஸ்வாமி அவனை அன்புடன் நோக்கி, "ஏண்டா பையா! உனக்கு என்ன வேண்டும்?'' என்று வினவினர். மஹானின் மகிமை மட ஸாம்பிராணிக்கு எவ்விதம் தெரியும்? அவன் தன் புத்திக்குத் தக்கவாறு "போதும் சாமி ஓம் பேச்சு. எனக்குக் கொடுக்க ஒங்கிட்ட என்ன வெச்சுருக்கே? தோளிலே தொங்கர கூடையிலே முறுக்கு சீடை கொணந்திருக்கையா? நான் ஒங்கிட்ட பச்சணம் பலவாரம் வாங்கித் திங்க வரலே. நீ இப்படி நெதம் எம் பசுக்களை யெல்லாம் வெரட்டி அடிக்கரே. இனிமே இந்த வழி வராதே. அப்படி செய்யாதபோனு மரியாதை கெட்டுப் போவே. தெரிஞ்சுக்கோ'' என்று உளறினன்.

ஸ்வாமி புன்சிரிப்புக் கொண்டார். அவர் திருமுகம் புகையற்ற அக்நிபோல் ஜ்வலித்தது. அஸத்தின் பிதற்றலை அவர் லக்ஷ்யம் செய்யவில்லை. பொறுமை என்னும் கவசம் பூண்டவர்களைச் சொல்லம்புகள் எவ்விதம் புண்படுத்தும்? மௌனமாய்த் தம்

வழியே நடந்தார். கொழுப்பெடுத்த கோபாலன், கூர்மையான கொம்புகளையுடைய துஷ்டக் காளையை அவர்பின் வெரட்டினான். நாலுகால் பாய்ச்சலில் ஓடிவந்த அப்பிராணி, அந்தணர் அருகில் வந்தவுடன் பரம ஸாதுவாய் அடங்கி, ஸ்ரீ ஸ்வாமியின் திருமுகத்தை நோக்கிய வண்ணமே நின்றது. அவரும் அதை அன்புடன் தடவிக்கொடுத்தார். 'ப்ராணிகளின் ஹிதத்தையே கோரும் ம்ருது ஹ்ருதயத்தை அவைகளும் அறியும்' என்பதைத் தெரிவிப்பது போலப் பாகவதோத்தமரைப் பக்தியுடன் வலம் வந்து வணங்கிச் சென்றது அம்மிருகம். ப்ரஹ்லாத குமாரன், அக்நி விஷம் ஜலம் முதலியவைகளிலிருந்து ஸுகமாய் ஜீவித்து வந்த பிறகும் அஸுரன் அவர் ப்ரபாவத்தை அறியாததுபோல், அதே ஸ்வபாவமுடைய மந்தமதியும் அந்தணர் பெருமையை உணராதவனானான். மீண்டும் மாட்டை அவர்மேல் பாயுமாறு அடித்து ஓட்டினான். பார்த்தார் ஸ்வாமி. கொஞ்சம் மனம் நொந்தார். "ஏனப்பா, இன்று இவ்விதம் துன்புறுத்துகிறாய்? எம்பெருமானை ஸேவிக்க நாழிகையாச்சுதே. என் மார்க்கத்தை மறிப்பதில் உனக்கென்ன பயன்? அந்யாயமாய் வாயில்லா ப்ராணியை ஏன் அடித்து வருத்துகிறாய்? நீ எவ்விதமாய் வெரட்டி அடித்தாலும் உன் மாடு என் நகக் கண்ணிற்கும் தீங்கிழைக்கமாட்டாது. பகுத்தறிவற்ற ப்ராணிக்கு இருக்கும் அறிவில் நூறில் ஒரு பங்குகூட உனக்கில்லையே! உனக்கு ஸர்வேஶ்வரன் தான் ஸந்மதியைக் கொடுத்தருளவேண்டும்" என அலுப்புடன் பகர்ந்தார்.

இடைப் பையனுக்கு மாடு தன் சொற்படி கேட்கவில்லையே என்னும் ஆத்ரம் ஒரு பக்கம்; தோழர்கள் ஏளனம் செய்வார்களே என்னும் வெட்கம் ஒரு பக்கம். ஸ்வாமியின் ஹிதோபதேசம் எவ்விதம் அவன் மண்டையில் ஏறும்? அவனுக்குக் கோபம் பொங்கி எழுந்தது. "என்ன சாமி புத்தியில்லைங்கரே? ஏன் எம்மாடு ஒங்கிட்ட வாலாட்டாது பார்க்கலாம். என்ன மாய மந்திரம் போடுகிறயோ போடு. இல்லாட்டி ஒம் வேசத்தைக் கண்டு பயந்துக்கிட்ட தூண்ணு நெனச்சிக்கிட்டையோ? துளசி மணியும், தாமரை மணியும், பட்டை நாமமும், வெள்ளைப் பூணூலையும் பார்த்து, புலி சிம்மம் என்னு நடுநடுங்கி ஓடி வந்திடிச்சுங்களய்யா. இதோ பாரு சாமி" என்று சொல்லிக்கொண்டே கழி முறியும் வண்ணம் மேன்மேலும் அப்பேதை ப்ராணியை அடித்து விரட்டினான்.

மஹான் மதிமுகத்தில் புன்னகையும் பெருமையும் தவழ்ந்தன. அவன், தம் வேஷத்தை நிந்தித்ததைக் கேட்டு மட்டில்லா மகிழ்ச்சி அடைந்தார். ஸ்ரீ ஸ்வாமி. சற்று நின்று, "அப்பா பையா! நீ சொல்வது முற்றிலுமுண்மை. நீ தூஷித்ததாக நினைத்தாய்; அது பூஷணையே யாயிற்று. யமதூதர்களே என் வேஷத்தைக் கண்டு அஞ்சி அருகில் வாரார்களே. உனக்கு ஒரு கதை சொல்கிறேன் கேள். ஒரு ஸமயம் பாசத்தைச் கையிலெடுத்துக் கொண்டு யமதூதர்கள் ஆயுள்முடிந்த ப்ராணிகளை இழுத்துவரப் புறப்பட்டார்கள். அவர்களைப் பார்த்து யமதர்மராஜன் அருகில் அழைத்துக் காதில் ரஹஸ்யமாய், "தூதர்காள்! ஒரு விஷயம் சொல்லுகிறேன்; அதை மனத்தில் பதிய வைத்துக் கொள்ளுங்கள், ஜாக்ரதை. மதுஸூதநன் திருவடித் தாமரைகளில் சரணாகதி யடைந்த தந்யர்களின் ஸமீபம் ஒரு பொழுதும் நாடாதே. பத்ரம். அவர்களை விட்டுவிடு. நான் வைஷ்ணவர்களுக்குப் ப்ரபு வல்லேன். பாகவதர்கள் என்னை ஆளும் வல்லமை வாய்ந்தவர்கள். அவர்களைத் தவிர மற்றவர்கள் தான் என் ஆளுகைக்கு உட்பட்டவர்கள். இதனை மறவாதீர்கள்" எனக் கட்டளை யிட்டான்.

"स्वपुरुषमभिवीक्ष्य पाशहस्तम् वदति यमः किल तस्य कर्णमूले ।
परिहर मधुसूदनप्रपन्नान् प्रभुरहमन्यनृणाम् न वैष्णवानाम् ॥"

அவ்விதமிருக்க உன் மாடு எனக்கு ம்ருத்யுவாய் எவ்விதம் வரும்? என்னைக் கண்டு அஞ்சுவதில் ஆச்சரியம் தானென்ன? வழியை விட்டு விலகு. வீணாய் மாட்டை அடிக்காதே. நாம் அதை அன்பாய்ப் பார்த்தால், அதுவும் தன் குணத்தை விட்டு அன்பாய் நம்மையும் பார்க்கும். கண்ணபிரான் அவதரித்த தூய குலத்தில் பிறந்த உனக்கு ஏன் இத்துர்ப்புத்தி?" என்று ஸ்வாமி பெருமூச் செறிந்து கூறினார். [தொடரும்.]

ஸ்ரீ:

செய்திகள்

சிங்கநல்லூரில் 42-ஆவது பட்டத்து ஸ்ரீ அழகியசிங்கர்.

ஸ்ரீ அஹோபில மடத்தில் இப்போது மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஸ்ரீரங்க ஶடகோப யதீந்த்ர மஹாதேசிகன், ஆனி மாஸம் 21-ந் தேதி (4—7—44) செவ்வாய்க்கிழமை இவ்வூருக்கு எழுந்தருளினார். 23-ந் தேதி (6—7—44) வியாழக்கிழமை ஸ்ரீ ஸங்கல்ப வ்ரதம் ஆரம்பமாயிற்று, ஸ்ரீ அழகிய சிங்கர், ஸ்ரீ உலகளந்த பெருமாள் ஸந்நிதியில் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை எழுந்தருளப் பண்ணி யிருந்தார். சிஷ்யர்களும்

ஸ்த்ரீகளும் பாலர்களும் ஸ்ரீ அழகிய சிங்கரைத் தரிசித்த வண்ணமாயிருந்தனர். சிஷ்யர்களில் பலர் ஸமாஶ்ரயணமும் ஒரு சிலர் பரந்யாஸமும் செய்து கொண்டனர். ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுக்குத் திருமஞ்சநமும், கண்ணனுக்கு டோலோத்ஸவமும் சிறப்பாக நடந்து கொண்டிருந்தன.

சிஷ்யர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி, 23—8—44-ல் ஸ்ரீ அழகிய சிங்கர், 'ஸ்ரீ ஸ்ரீரங்க ஶடகோப ஸபை' என்ற ஓர் ஸபையை ஆரம்பித்து வைத்தார். முதன் முதலாக, இவ்வூர்க் குழந்தைகள் ஒன்று சேர்ந்து, மிகவும் ஶ்ரத்தையோடு கண்ணனுக்கு டோலோத்ஸவம் செய்து வைத்தது ஸ்ரீ அழகிய சிங்கரை ஆநந்த ஸாகரத்தில் ஆழ்த்தியது. மாணவர்களின் ப்ரார்த்தனைக்குத் திருவருள் புரிந்து, ஸ்ரீ அழகிய சிங்கர் 2—9—44-ல் 'ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ மாணவர் ஸபை' என்று ஒன்றை ஸ்தாபித்தார்.

த்ரிவிக்ரம நாராயணன்.

श्रीः

श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

ஸ்ரீ அழகியசிங்கரின் யாத்ரோத்ஸவம்

ஸ்ரீ அழகிய சிங்கர், ஸங்கல்பம் முடிந்தவுடன் சிங்கநல்லூரை விட்டு ப்ரஸ்தாநமாகி, ஸத்யமங்கலம் மார்க்கமாக மைஸூர் ராஜதாநியில் அநேக ஸ்தலங்களை அநுக்ரஹித்துக்கொண்டு இப்பொழுது மேல்கோட்டைக்கு எழுந்தருளியிருக்கிறார். வருகிற சனிக்கிழமை திநம் [7—10—44] ஸ்ரீ செல்வப்பிள்ளையின் மங்களாஶாஸநம் நடக்கிறது.

* * * *

கலாஶாலையின் அத்யக்ஷத்வமும் ஸ்ரீ ஸந்நிதி ஸ்ரீ கார்யமும்

சற்றேறக்குறைய ஒரு வர்ஷ காலமாகப் பாடஶாலையின் அத்யக்ஷ பதவியை வஹித்து வந்த தேவனூர் விளாகம் வித்வான் ஸ்ரீ. உப. லக்ஷ்மீநரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, தமது க்ருஹ ஸம்பந்த கார்யங்களின் நிர்ப்பந்தத்தால் அந்த அத்யக்ஷ பதவியிலிருந்து சென்ற கோடை விராம கால முடிவில் தம்மை நிவர்த்தித்துக்கொண்டார். அந்த ஸ்தாநத்திற்கு இப்பொழுது இஞ்சிமேடு வித்வான் ஸ்ரீ. உப. சேட்லூர் ராகவாசார்ய ஸ்வாமி ஸ்ரீ அழகிய சிங்கரால் நியமிக்கப்பட்டு, சென்ற ஸெப்டம்பர் மாஸம் 4உ முதல் அந்தக் கைங்கர்யத்தை நிர்வஹித்து வருகிறார். இந்தச் சேட்லூர் ஸ்வாமி, சென்ற ஏழெட்டு வர்ஷ காலமாகத் திருப்பதி ஸம்ஸ்க்ருத கலாஶாலையில் ஒரு முக்ய மான ப்ரவசந கர்த்தாவாக இருந்து வந்தவர்; ஆகையால் கலாஶாலை நிர்வாஹ ஸம்பந்தமான லௌகிக வ்யாபாரங்களில் பரிநிஷ்பந்ந ஜ்ஞாநம் இவருக்கு இருக்கக் கூடும். ஸ்ரீ அழகிய சிங்கரிடம் இவருக்கு இருக்கும் ப்ரதிபத்தியும் வித்யா ப்ரவசநத்தில் இவர் கொண்டிருக்கும் ஒரு ஆஸ்தா விசேஷமுமே இந்தக் கைங்கர்யத்தில் அந்வயிக்கும்படி இவரைத் தூண்டிற்று என்று நினைக்க ஹேதுக்கள் இருக்கின்றன. முதிர்ந்த வைதுஷ்யத்துடன் இம்மாதிரியான உத்ஸாஹ ஸம்பத்தும் கூடியிருக்கும் வ்யக்தியே இப்படிப்பட்ட ஸ்தாநத்திற்கு அர்ஹர். "एतद्द्वयं यस्य स शिक्षकाणां धुरि प्रतिष्ठापयितव्य एव". இவருடைய ஆத்யக்ஷ்யத்தில் கலாஶாலை மேன்மேல் அபிவ்ருத்தமாகுமென்றே நாம் விஶ்வஸிக்கிறோம்.

கொஞ்ச காலமாக ஸ்ரீ ஸந்நிதி ஸ்ரீ கார்யத்தை நிர்வஹித்து வந்த அம்மணம்பாக்கம் ஸ்ரீ. உப. நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, சென்ற ஆடி மாஸத்தில் பரமபதம் அடைந்தார் என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். அந்த ஸ்தாநத்திற்கு அநுரூபமான ஒரு வ்யக்தி எங்கிருந்து கிடைக்கப்போகிறதென்று ஸ்ரீ அழகிய சிங்கருக்குப் பெரியதொரு சிந்தை இருந்தது. அந்தச் சிந்தை ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் அநுக்ரஹத்தால் ப்ரஶமநம் ஆகுமாறு, ஸ்ரீ அழகியசிங்கருடைய நியமநம் ஸுஸத்ருஶரான ஒரு வ்யக்தியின் மீது விழுந்திருக்கிறதென்று நாம் அறிகிறோம். தையாறு ஜோஸ்யம் வித்வாம் ஸ்ரீ. உப. ரங்காசார்யர் என்னும் ஒரு ஸ்வாமி அந்த ஸ்தாநத்தில் நியமிக்கப்பட்டு, ஒரு மாஸ காலமாக அந்தக் கைங்கர்யத்தை நிர்வஹித்து வருகிறார். அந்த ஸ்வாமி அந்த ஸ்தாநத்திற்கு அபேக்ஷிதமான யோக்யதை வாய்ந்தவரென்றே நாம் கேள்விப்படுகிறோம். ஸ்ரீ அழகிய சிங்கர் வீத சிந்தராக எழுந்தருளியிருக்குமாறு, ஸ்ரீ ரங்காசார்ய ஸ்வாமி ஸ்ரீ ஸந்நிதி கார்யங்களை நிர்வஹித்து வருவாரென்று நாம் விஶ்வாஸத்துடன் ப்ரதீக்ஷித்திருக்கிறோம்.

* * * *

Regd. No. M. 4437

ராவ் கமிட்டி ஹிந்துச் சட்ட பில்

நமது வைதிக தர்மத்தை நாம் ஸநாதந தர்ம மென்று வ்யவஹரித்து வருகிறோம். அதாவது: அந்தத் தர்மம் நமது சஞ்சலமான புத்தியால் மாற்றக்கூடாதபடி அந்யாத்ருஶ மான ஒரு ப்ரதிஷ்டையைப் பெற்றிருக்கின்றது என்பது அதன் பொருள். த்ரிகால ஜ்ஞாநிகளான மஹர்ஷிகள் ஜகத்தின் க்ஷேமத்தையே கருதினவர்களாய், வேதத்திலிருந்து ஈஶ்வரனுடைய திருவுள்ளத்தை அந்த ஈஶ்வரனால் கொடுக்கப்பட்டுள்ள ஜ்ஞாந த்ருஷ்டியால் ஸாக்ஷாத்கரித்து, ஸநாதந தர்மத்தின் ப்ரகாரத்தைத் தர்ம ஶாஸ்த்ர ரூபமாக வெளியிட்டிருக்கிறார்கள். அப்படி வெளியிடப்பட்டிருக்கும் தர்மமே நமக்கு ஸர்வ ப்ரகாரத்தாலும் ரக்ஷகம்; ஆகையால் அதுவே நம்மால் தவறாது பரிபாலிக்கப்பட வேண்டும். சிற்சில காலங்களில் சிற்சில பாஷண்டிகள் வெளிவந்து, அந்தத் தர்ம மார்க்கத்தை மாற்றுவதற்கு ப்ரயத்நப்படுகிறார்கள். ஸகல காலத்திற்கும் ஸகல ப்ரஜைகளுக்கும் ஹிதமென்று வ்யவஸ்தை செய்யப்பட்டிருக்கும் இந்தத் தர்மத்தைக் கால தேஶாநுகுணமாக மாற்றவேண்டு மென்று இவர்கள் ப்ரயத்நப்படுவது மூட க்ருத்யமன்றோ? இவர்கள், தாம் மஹர்ஷி துல்யர்க ளென்றும், தம்முடைய புத்தி ஶக்தியே எந்தக் கார்யத்திலும் தவறாத ஸாதந மென்றும், தீநர்களை ரக்ஷிப்பதற்காகவே தம்மை ஈஶ்வரன் ஸ்ருஷ்டித்திருக்கிறானென்றும் ஒரு மூட நினைவைச் செய்துகொண்டு, ஜநஸாமாந்யத்திற்குப் பெருத்த தீங்கையே விளைவிக்கிறார்கள்.

இப்பொழுது சில லௌகிக ஶிகாமணிகள் நமது ஸநாதந தர்மங்களை மாற்ற முன் வந்து நிற்கிறார்கள். பரம்பராகதமான நமது ஶிஷ்ட அநுஷ்டாநங்களையும் ஆசாரங்களையும் தலை கீழாக மாற்றவேண்டு மென்னும் உத்தேஶத்துடன் அவர்கள் சில சட்டங்களை ஏற்படுத்துகிறார்க ளென்று நாம் அறிகிறோம். பிதா ஆர்ஜநம் செய்த ஸொத்துக்களில் ஆண்மக்களுக்குப்போல் பெண் மக்களுக்கும் சட்டப்படி உரிமை வேண்டும் என்பதும் விவாஹங்களில் அவரவர்களுடைய இஷ்டமே ப்ரமாணமென்பதும் அவர்கள் கொண்டு வந்திருக்கும் பில்லின் (Bill) முக்ய விஷயங்கள். இதை ஒரு சட்டமாக்கி விட வேண்டு மென்று அவர்கள் மஹத்தான ப்ரயத்நம் செய்து வருகிறார்கள். இது நமது குடும்பங்களில் மஹத்தான அவ்யவஸ்தையை உண்டுபண்ணிப் பெரிய க்ஷோபத்தை ஜநிப்பிக்குமாதலால், இவர்களுடைய இந்த ப்ரயத்நத்தைப் பலிக்கவொட்டாமல் தடுக்க முயலவேண்டுவது வைதிகர்களான நம்முடைய முக்ய தர்மம். அவர்கள் பல தர்ப்பிதர்களால் தமது கார்யத்தை ஸாதித்துக் கொள்ளலாம். 'पराक्रमस्त्वेव ममेह रोचते' என்று சொல்ல நமக்கு ஶக்தியில்லை. ஶாரதா சட்டத்திற்போல தீநர்களான நம்முடைய முயற்சி விபலமானாலும் ஆகலாம். ஆனாலும் நம்முடைய தர்மத்தை நாம் செய்ய வேண்டும். வேறு ஒன்றும் செய்யாவிட்டாலும், 'நீங்கள் செய்வது மூட க்ருத்யம்; அது மிகவும் அக்ரமம்; அதைச் செய்வதால் தைவத்தின் நிக்ரஹத்திற்குப் பாத்ரமாவீர்கள்' என்று முறையிடுவோம். பிறகு ஸ்ரீ ஶரண்யனே ப்ரமாணம்.

அநேக இடங்களில் இந்தப் பாஷண்டிகளின் ப்ரயத்நத்தைக் கண்டித்து ஸங்கங்கள் கூடித் தீர்மாநம் நிறைவேற்றியிருக்கிறார்கள். ஸ்ரீமான் எஸ். என். வெங்கடேஶ ஐயங்காருடைய அத்யக்ஷத் தன்மையின் ஆதரவில் கோயம்புத்தூரில் ஒரு பலத்த ஸங்கம் நடந்ததாம். ஸ்ரீ அழகியசிங்கருடைய நியமநத்தின் பேரில் முக்கூர் வித்வான் ஸ்ரீ ராஜ கோபாலாசார்ய ஸ்வாமி ப்ரஸ்துத சட்டத்தின் கொள்கைகளைக் கண்டித்து உபந்யாஸம் செய்தாராம். இன்னும் பலவிடங்களில் கண்டநம் நடக்கிறதாக நாம் கேள்விப்படுகிறோம். ஆனாலும் இவை அபர்யாப்தங்க ளென்பதே நமது அபிப்ராயம்.

* * * *

சந்தாதாரர்களுக்கு விஜ்ஞாபனம்

1944-ம் வரு நாளை டிஸம்பர் மாஸத்தோடு நமது "ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா"வுக்கு மூன்றாம் ஆண்டு நிறைவுறுகிறது. இவ்வாண்டுக் குரிய சந்தாவைச் செலுத்தாத சந்தாதாரர்கள் நாளை டிஸம்பர் மாதத்திற்குள் தமது சந்தாத் தொகையை க்ருபை செய்து செலுத்த வேணுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம். நமது பத்ரிகை அரசாங்கத்தாரின் நியமநத்தின் பேரில் காகிதப் பஞ்சத்தால் க்ருஶ முற்றிருக்கிறது. இக்கார்ஶ்யம் இரண்டொரு மாதங்களில் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் கடாக்ஷத்தால் நீங்கி அது பூர்வ ஸ்திதியை அடையக்கூடும். இவ்வண்ணம் அடையுமாறு த்ருடமான ப்ரயத்நங்கள் செய்யப்பட்டும் வருகின்றன. சந்தாதாரர்கள் இந்தத் தாத்காலிக மெலிவை நினைந்து வருந்தாமல், இதன் போஷணத்துக் கென்று ஏற்பட்டுள்ள வர்ஷச் சந்தாவைச் சீக்ரத்திலேயே செலுத்திவிடும்படி மீண்டும் ஜ்ஞாபகப் படுத்தப்படுகிறார்கள்.

* * *

திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கத்தின் 15-வது வெளியீடாகிற 'அடைவு அமைக்கும் அறிஞன்' என்னும் கட்டுரையை வரப்பெற்றோம். படித்து மகிழ்ந்தோம். இத்தகைய வெளியீடுகள் பதே பதே ப்ரகாசித்தால் தமிழுலகம் பயன்பெறும் என்பதற்கு ஐயமில்லை.

Printed by K. S[illegible]pacharia, at the Liberty Press, 10, Linghi Chetty Street. G.T., Madras
Edited & Published by S. Vasudevachariar, 5. Ramaswami Street, Tyagarayanagar, Madras

2/10/31